## ஹஜ் நிறைவேற்றுவதில் வாஜிபானவை

1 **முஸ்தலிஃபாவில் தங்கியிருத்தல்** அரஃபாவில் உஃகூஃப் செய்த பின்பு குறைந்தது இரவின் இறுதிப் பகுதிக்குள் முஸ்தலிஃபா சென்றடைவது முக்கியமானதாகும், இல்லையெனில் **தம்** கொடுப்பது (ஒரு பிராணி ஃகுர்பானி கொடுப்பது) கட்டாயமானதாகிவிடும். இருப்பினும், அங்கே தங்கியிருக்கத்தேவையில்லை. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

فَإِذَآ أَفَضۡتُم مِّنۡ عَرَفَٰتٖ فَٱذۡكُرُواْ ٱللَّهَ عِندَ ٱلۡمَشۡعَرِ ٱلۡحَرَامِۖ ١٩٨ (البقر 98)

*பொருள்: இன்னும், அரஃபாத்திலிருந்து நீங்கள் திரும்பி வரும்போது மஷ்ஃஅருல் ஹராமில் (முஸ்தலிஃபாவில்) தங்கி அல்லாஹ்வை நினைவுகூருங்கள் (அல் பஃகதஹ்:198)*

ஹாஜிகள் முஸ்தலிஃபாவில் மங்க்ரிப் மற்றும் இஷா தொழுகைகளை ஜம்ஃஉ முறையில் ஒன்றாகச் சேர்த்துத் தொழவேண்டும். முஸ்தலிஃபாவில் நஃபிலான தொழுகைகள், ஃகுர்ஆன் திலாவத்து (ஓதுதல்) மற்றும் அல்லாஹ்வை அதிகமாகத் தியானித்து துஆ கேட்டுக்கொண்டிருக்கவேண்டும். தற்போது மஷ்ஃஅருல் ஹராமில் ஒரு பள்ளிவாசல் கட்டப்பட்டுவிட்டது, அங்கே தங்கலாம். முஸ்தலிஃபாவில் ஃபஜ்ரு தொழுகையை அதற்கான நேரத்தின் துவக்கத்திலேயே நிறைவேற்றவேண்டும்.

2 **ஜமராத்தில் கல்லெறிதல் (ரம்யு ஜமரஹ்)** ரமயுன் என்பது கல்லெறிதலாகும் மற்றும் ஜமரஹ் என்பது கல்லெறியப்படும் நிர்ணயிக்கப்பட்ட இடங்களாகும். இவை மினாவில் சின்னங்களாகக் கட்டப்பட்டுள்ள மூன்று இடங்களாகும். அவையாவன: ஜம்ரதுஸ் ஸுங்க்ரா (சிறிய ஜம்ரஹ்), ஜம்ரதுல் உஸ்தா (நடுவிலுள்ள ஜம்ரஹ்) மற்றும் ஜம்ரதுல் ஃஉஃக்பா அல் குப்ரா (உஃக்பாவான பெரிய ஜமரஹ்). ரம்யுல் ஜிமார் (கவ்லெறிதல்)யவ்முன் நஹ்ர் எனப்படும் துல் ஹிஜ்ஜஹ் பத்தாம் நாள் மற்றும் அதனை அடுத்த மூன்று நாட்கள் வரையிலும், அதாவது துல் ஹிஜ்ஜஹ் 11, 12, 13 ஆகிய நாட்களான அய்யாமுத் தஷ்ரீஃக் நாட்களில் மேற்கொள்ளப்படும், அல்லது 12 ஆம் நாள் வரையிலும் செய்யலாம். ஹாஜிகள் ஒவ்வொருவரும் தாமாகவே கல்லெறிய வேண்டும் அல்லது ஏதும் காரணம் இருக்குமானால் இதனை மற்றொருவரிடம் ஒப்படைக்கவும் செய்யலாம்.

துல் ஹிஜ்ஜஹ் பத்தாம் நாள் அன்று ஏழு கற்கள் ஜம்ரதுல் ஃஉஃக்பாவின்மீது எறியப்படும். கல்லெறியும் நேரம் காலைப்பொழுது விடிந்

www.uzairfalahi.com

*ததிலிருந்து ச்சாஷ்த் தொழுகையின் நேரம் வரையாகும். துல் ஹிஜ்ஜஹ் பதினொன்றாம் நாள்மூன்று ஜம்ராத்களின்மீதும் ஏழு ஏழு கற்கள் எறியப்படவேண்டும், அதாவது இருபத்தொன்று கற்கள் எறியப்படும். அவ்வாறே, துல் ஹிஜ்ஜஹ் 12 மற்றும் 13 ஆம் நாட்களிலும் கற்களை எறியவேண்டும். இருப்பினும், எவரும் பதிமூன்றாம் நாளன்று கற்களை எறியவில்லை என்றாலும் அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது, அல்லாஹ் தஆலா கூறுகின்றான்:*

فَمَن تَعَجَّلَ فِي يَوْمَيْنِ فَلَآ إِثْمَ عَلَيْهِ ﴿٢٠٣﴾ البقر (203

*பொருள்: பின்னர், எவரேனும் இரண்டே நாட்களில் அவசரமாகத் திரும்பிவிட்டால் அவர்மீது குற்றமேதுமில்லை (அல் பஃகதஹ்:203)*

## 3 ஜமராத்தில் கல்லெறிதலின் முறை மற்றும் அதற்கான சுன்னத்துகள்

*கற்கள் முழு கடலை அளவிற்குச் சிறியதாகவோ அல்லது சற்று பெரியதாகவோ இருக்கலாம்:*

- ★ **ஜம்ரஹ்வைக் கல்லெறியும் நிய்யத்துடன் கற்களை வீச வேண்டும்**
- ★ **ஜம்ரஹ்வைச் சுற்றி கட்டப்பட்டுள்ள சுவரின் பரப்பெல்லைக்குள் எறியப்படும் கற்கள் விழவேண்டும், அதற்கு வெளியே விழக்கூடாது**
- ★ **கற்கள் ஒன்றன்பின் ஒன்றாக எறியப்படவேண்டும், ஏழு கற்களையும் ஒன்றாகச் சேர்த்து வீசுவது சரியானதல்ல**
- ★ **வலது கையினால் கல்லெறியப்படவேண்டும், இருப்பினும் காரணம் ஏதும் இருக்குமானால் இடது கையினாலும் வீசலாம்**
- ★ **கல்லெறியும் நபர் ஆணாக இருந்தால் அவர் தன்னுடைய கையை உயர்த்தி வீசியவாறு அவருடைய அக்குள் பகுதி தெரியும் வகையில் கல்லெறியவேண்டும்**
- ★ **கல்லெறியும்போது மக்காஹ் நகரம் அவருடைய இடது புறமாகவும் மினா அவருடைய வலது புறமாகவும் இருக்கும் வகையில் ஜம்ரதுல் உஃக்பாவை நோக்கியவாறு நின்றுகொண்டு கற்களை வீசவேண்டும்**
- ★ **இதே வகையில் கல்லெறிந்துவிட்டு ஜம்ரஹ்வின்மீது கற்களை வீசியபின் அங்கே தங்கக்கூடாது**
- ★ **முதலாம் மற்றும் இரண்டாம் ஜம்ரஹ்வின்மீது கல்லெறிந்துவிட்டபின் ஃகிப்லாவை நோக்கி துஆ செய்யவேண்டும்**
- ★ **முதலாவது கல்லெறியும் நிய்யத்துடன் கற்களை வீசவேண்டும்**
- ★ **ஜம்ரஹ்வின்மீது கல்லை எறிவதற்கு முன்பாகவே தல்பியஹ் சொல்வதை நிறுத்திக்கொள்ளவேண்டும்**

* * *

www.uzairfalahi.com